IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சமயப்பொறைக்கு கிறித்தவ இலக்கியங்களின் பங்களிப்பு

# Contribution Of Christian Literature To Religion


## RESEARCH GUIDE

**Dr. A. ARUL DASSE**

Assistantant Professor

P.G & Research Department of Tamil

Arignar Anna Govt Arts College

Villupuram (T.Nadu) – 605 602.

## RESEARCH SCHOLAR

**A. JEBAMALAIMARY**

P.hd (Full Time) Scholar

P.G & Research Department of Tamil

Anna Govt Arts College

Villupuram (T.Nadu) – 605 602.


**முன்னுரை :**

நாட்டிய நாடகத்தில் பல செய்திகள் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வல்லமையானது. இந்நாட்டிய நாடகத்தின் வாயிலாக சமயப்பொறைகள் பற்றியும் நாம் அறிய முடிகிறது. இவ்வியலில் சமயப்பொறை பற்றியும் பொதுவாக மதங்கள் கூறும் பொறை பற்றியும் விவிலியத்தில் அறியலாகும் பொறை பற்றியும் இக்கட்டுரையில் ஆய்ந்தளக்கப்பட்டுள்ளன.

இயேசுபிரான் இவ்வுலக மக்களுக்காக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கவே பிறந்தார் என்பதைக் குறித்தும் உலக மக்களின் பாவங்களுக்காகவே அவரை சிலுவையில் அறைந்த காட்சியையும்இ அவரின் சகிப்பு தன்மை மற்றும் தனக்கு கொடுமை செய்தவர்களுக்காக பிதாவிடம் தாங்கள் செய்வது இன்னதென அறியாதிருக்கின்றார்கள் என வேண்டும் பண்பினையும் இவர்களை மன்னியும் என்று கூறியதையும் இயேசுவின் அளப்பறியாத் தொண்டினையும் நாடகங்களின் வழியாக நடித்து மக்களுக்கு விளங்க செய்ததின் மூலம் உலகமே இயேசுவைக் கொண்டாடுகின்றனர்.

**சமயப்பொறை :**

பொறை என்பது “தமக்குத் துன்பஞ் செய்தாரைத் தாமும் துன்பஞ் செய்யாது அவர்மாட்டு உண்டாகிய வெகுளியைப் பொறுத்தல் பொறை”[1] ஆகும் என்று டாக்டர்.சூ. காந்தி தமிழர் எண்ணங்கள் எனும் தமது நூலில் கூறுகிறார்.

எல்லா சமயங்களும் சமயப்பொறையைக் கொண்டு மனிதநேயத்தை வளப்படுத்துகின்றன.

மதுரைத் தமிழ் பேரகராதி பொறைக்கு, “கருப்பம், சலதாரை, முதலிய வடைக்குங்கல், சிறுமலை, சுமை, பாரம், கனம், பூமி, பொறுமை, பிறர் தீமைக்கு மாறு செய்யாது சகித்தல், இது

பெரியோர் இயல்புகளில் ஒன்று. சாத்துவிக குணத்துமொன்று, மலை, அடக்கம், வலிமை, காவுதடி"[2] என இவ்வாறு பொருள் கூறுகிறது.

அன்பு, தியாகம். மேம்பாடு, மனிதநேயம், விட்டுக் கொடுத்தல், மன்னித்தல், சகோதரத்துவம், ஈவு, இரக்கம், சமாதானம், தாழ்மை முதலிய உயரிய பண்புகளுடன் கிறித்தவ நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துதாஸ் ஐயர், ப .சோதிமுத்து, தி. பாக்கிய முத்து, எஸ் பொன்ரத்தினம், ஜே.தனராஜ், இரணியேல் கலைத் தோழன், ஜோசப் உத்தரியம், டாக்டர் தி.தயானந்தன் பிரான்சிஸ், வி.ஆர்.எஸ். ஜான். கருங்கண்ணி ஏயெல், பி.ஏ.தாஸ், கவிஞர் சி. ஜோசப், டாக்டர்.சூ. இன்னாசி, செங்கைராசன், திருமதி கோ. சாந்தகுமாரி, திருமதி ஆர்.வி. அற்புதநாதன், ஜே.டி. மனாசே அம்மையார், அற்புதா, டாக்டர். கோரா முதலிய பெண் எழுத்தாளர்களும், கிறித்தவ நாடகங்களைப் படைத்துள்ளர்.

இவர்கள் புனிதர்களின் வாழ்வையும், அவர்களின் தியாகத்தையும் மற்றும் சமுதாய அவலங்களையும் நாடகத்தின் மூலம் எடுத்துக்காட்டும் போது இவ்வாசிரியர்கள் மக்கள் மனதிலே என்றும் நீங்கா இடம் பெற்றுள்ளனர் என்பதை மறுக்கவியலாது.

**சிலுவை அன்பு :**

டாக்டர். தயாவின் நாடகங்கள் எனும் தொகுப்பினுள் முதல் நாடகமான 'தமிழகத்தில்' தோமையர்' எனும் நாடகத்திரல் சிலுவை அன்பினைப் பிற்றி டாக்டர்.தி. தயானந்தன் பிரான்சிஸ் பின்வருமாறு சுட்டுகிறார்.

"நன்மொழியார் : சிலுவை அன்பு – சிலுவை அன்பு – என்று சொல்வீர்களே அதை உங்கள் வாழ்க்கையில் காட்டிவிட்டீர்கள்.... உங்கள் உடலை – உள்ளத்தை – உதிரத்தை... எலும்புகளை – எல்லாவற்றையுமே இந்நாட்டு மக்களுக்கு அளித்து விட்டீர்கள் உங்கள் அன்புடல் அடக்கம் செய்யப்படும் இந்தத் தமிழ் நிலத்துக்கு உங்கள் எலும்புகளால் புனிதம் கூடட்டும்..."[3]

திருவள்ளுவர் : (பாடுகிறார்)...

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு."[4]

மேற்காணும் நாடகத்தில் இடம் பெற்றுள்ள வசனங்களும், குறளும் சமயப்பொறைக்குச் சான்றாகிறது. சான்றாக: 'உங்கள் உடலை – உள்ளத்தை – உதிரத்தை... எலும்புகளை – எல்லாவற்றையும் இந்நாட்டு மக்களுக்கு அளித்துவிட்டீர்கள்' என்ற வாசகத்தின் வாயிலாக சமயப்பொறை பற்றி அறிய முடிகிறது. தோமையர் அனைத்து தரப்பு மக்களுக்காக தன்னுயிரையும் விட்டுவிட்டார் என்று ஆசிரியர் கூறுகின்ற விதம் சமயப் பொறைக்கு சான்றாக விளங்குகிறது.

இறைவனின் அளவிடற்கரிய அன்பினைப் பற்றி திருவிவிலியம் 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"[5] என்று கூறுகிறது.

"தன்னொரு மகவைத் தந்த தற்பரன் அன்புவாழி

பொன்னுல கிழிந்து வந்த புண்ணியன் வாழிவாழி

மன்னுயிர் புரக்க வந்த மனுமகன் சரணம்வாழி

என்னையிந் நிலைபாலிக்கு மெம்பிரான் கிருபைவாழி"[6]

என்று இரட்சணிய யாத்திரிகம் மெய்யுணர்ச்சிப் படலத்தில் இறைவனாகிய பிதாவின் அன்பினைக் குறித்து இயம்புகின்றது. இங்கு இறைவனின் அன்பு சமயப் பொறைக்குச் சான்றாக விளங்குகின்றது.

**சகோதரத்துவ ஒற்றுமை :**

சகோதர்களின் ஒற்றுமைக்கு ஒருவர்மேல் ஒருவர் வைத்திருக்கும் அன்பே காரணமாகிறது. "ஒருவனுடைய உள்ளத்திலுள்ள அன்பை அவன் கொடுக்கும் தொகையை வைத்து மதிப்பிட முடியாது."[7] என்னும் சீன பழமொழிக்கேற்ப பின்வரும் நாடகத்தின் மூலமாக சகோதரத்துவ ஒற்றுமை கூறப்பட்டுள்ளது.

மதுரை இளங்கவின், கிறித்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி எனும் தமது நூலில் இரணியேல் கலைத்தோழன் "பணமும் பாசமும்" எனும் நாடகத்தில் சகோதரத்துவ ஒற்றுமையைக் குறித்து கூறியுள்ளார் என்பதனைப் பற்றி பின்வருமாறு சுட்டிக்காட்டிக் கூறுகிறார்.

"வேண்டாண்டா! நீயே வச்சுக்கோ! முன் போல எல்லா பொறுப்புகளையும், நீயே கவனிச்சிக்கோ'

அண்ணா! நீங்க வெளிநாட்டிலே இருந்தப்போ உங்க சொத்துகளை கவனிக்க ஒரு நபர் தேவைப்பட்டது. இப்போ – நீங்க இங்கேயே இருக்கிறீங்க நான் எதுக்கு?

தம்பி குணம்! கணக்கு கேட்டேன் என்கிறதுகாக, எல்லா பொறுப்புகளையும் விட்டிடுறேன்னுச் சொல்றியே! நாலுபேர் அறிஞ்சா நமக்குள்ள தகராறு அப்படடீன்னு நினைக்க மாட்டாங்களா? சொத்துகளுக்கு சொந்தக்காரர் சொத்துக்களை கவனிக்கும்போது, மத்தவங்க தப்பா நினைக்கவே மாட்டாங்க"[8]

மேற்காணும் நாடகத்தில் சொத்துக்களை பராமரிக்கின்ற பொறுப்பினை தம்பியிடம் அண்ணன் ஒப்படைத்திருப்பது சமயப் பொறைக்கும் சகிப்புத் தன்மைக்கும் சான்றாக விளங்குகிறது சமுதாயத்தில் அண்ணனும், தம்பியும் ஒற்றுமையுடன் இருப்பதனை ஆசிரியர் குறிப்பிடுவது போற்றுதற்குரியதாகும்.

சகோதரர்களுக்குள் உள்ள பகைமையினை பற்றி இயேசுவின் போதனைளோடு பொருந்தி கூறி, சகோதரத்துவம் ஏற்படுத்தும் வகையில் அருள் பால்ராஜ் என்பவர் பின்வருமாறு சுட்டிக்காட்டி கூறுகிறார்

"வக்கீல் சார் இனிமேலேயும், நான் பொறுத்துக் கொள்ள முடியாது என் அண்ணனோட அட்டகாசம், வரவர அதிகமாப் போகுது உங்ககிட்டே பலமுறை சொல்லிட்டேன். நேற்று தகராறு முத்தி அடிதடிவரும். அளவுக்கு ஆகிப்போச்சு, சண்டைப் போட்டு சாதிக்கிறதை சட்டத்தை வச்சு சாதிக்கலாமுனு வந்துவிட்டேன் என்றார் அந்தோணி. ஆமாம் அந்தோணி சண்டை புடிச்சேன்னா போலிஸ் ஸ்டேஷனுக்குப் போகணும். சட்டத்தைப் புடிச்சேன்னா கோர்ட்டுக்குப் போகணும். என்கிட்டே வந்துட்டேன், கவலையை விடுங்கோ என்றார் வக்கீல்"[9] என்ற சான்றாதாரத்தின் மூலம் சகோதரர்களுக்குள் உள்ள பகைமையை பறைசாற்றியும், அப்பகைமை ஒழிந்து சகோதர அன்பு வளரவும், ஆசிரியர் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதே போல,

"அக்கிரமக்காரர்கள் அக்கினி சூளையில் எறியப்படுவர். நீதிமான்கள் தங்களுடைய தந்தையின் அரசிலே சூரியனைப் போல் சுடரொளி வீசுவர்"[10] என்ற இயேசு பெருமானின் பொன்மொழிக்கு ஏற்ப அன்பற்ற அக்கிரமக்காரர்கள் அடையும் வேதனையும், அன்பையே பிரதானமாகக் கொண்டு இயேசுவின் போதனைகளைக் கைக்கொண்டு நடப்போர் அடையும் பேற்றையும் மேற்காணும் கதையானது வலியுறுத்தப்படுகிறது.

**மன்னிக்கும் பண்பு :**

டாக்டர்.தி தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் 'கற்கள்'எனும் தமது நாடகத்தில் மன்னித்தில் பற்றி பின்வருமாறு சுட்டுகிறார்.

"எஸ்தர் : கல்லடி தாங்காம தரையிலே சுருண்டு விழுந்து கிடக்கிற நெலையிலேயும், "ஆண்டவரே, இவர்கள் மேல் இந்த பாவம் சுமத்தப்பட வேண்டாம். இவர்களை மன்னியும்" ண்ணு சொன்னாரம்மா அந்த பக்தர். அவர் முகத்திலே எப்போதுமே இல்லாத ஒரு கலை இருந்துச்சம்மா. ஒரு தேவதூதன் முகம் போல இருக்கேண்ணு அங்கிருந்தவங்க பேசிக்கிட்டாங்க அதுக்கப்புறம் சில நிமிஷங்களுக்குள்ளே அவர் உயிர் பிரிஞ்சிடுச்சம்மா.

நாகேல் : அப்படியா? அக்கா. இப்படி ஒரு தெய்வத் தொண்டரை நான் இதுவரையிலே பார்த்ததுமில்லே ......"[11]

மேற்காணும் நாடகத்தில் ஸ்தேவானாகிய இயேசுபிரான் மக்கள் தன்னை கல்லால் அடித்தும், முகத்தில் காறி துப்பியும், அவமானப்படுத்தியும், சிலுவையில அறைந்தும், முள்முடி சூட்டியும், என இவ்வளவாக கொடுமைப்படுத்தியதை சகித்துக் கொண்டு, ஆண்டவரே, இவர்கள் மேல் இந்த பாவம் சுமந்தப்பட வேண்டாம் இவர்களை மன்னியும் என்று வேண்டுவதாக விவிலியகருத்தை ஆசிரியர் கூறியிருப்பது சமயப் பொறைக்குச் சான்றாகிறது.

மேலும் இரட்சணிய யாத்திரிகம் ஆதிப் பருவம், சுவிசேட மார்க்கப் படலத்தில் மன்னித்தல் குறித்து ஆசிரியர் பின்வருமாறு சான்று தருகிறார்.

"தன்கடனை தனக்கிரங்கித் தீரணிபன் மன்னித்த பெருந் தகையோராத

வன்கண்ணன்றன் கடனாளி தனைபபிடித்துக் குரல்வளையை வலிந்துபற்றி

என்கடனை யிறுவென்றா னிறைவனறிந் தவனையிருஞ் சிறையிலிட்டான்

நன்குபிறர் பிழைசமிக்கில் நம்பனுநம் பிழைசமிப்பர் நலத்தை யாய்மின்"[12]

மேற்காணும் பாடலின் மனிதரது அளவற்ற பாவங்களை மன்னிக்கும் இறைவனது தன்மையைக் கூறுவதோடு மட்டுமில்லாமல் மனிதரும் அவ்வாறே தமக்கு குறை செய்வாரை மன்னிக்க வேண்டும். என்ற உண்மையினை உணர்த்தி, சமயப் பொறைக்குச் சான்றாக விளங்குகிறது திருவிவிலியம் இதனை,

"... மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"[13] என குறிப்படுகின்றது. மேலும் அந்த சுவிசேட மார்க்கப்படலத்தில்,

“மகனிவன் மரித்தா ன்னினே மறுத்துயிர் பெற்றானாகத்
தகவுடை விருந்தெ மர்க்குச் சமைக்கெனப் பணித்து மைந்தர்க்
குகவையின் வஸ்திராதி யுடுத்தருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ்கொண்டாடி யிருந்தனன் புதல்வனோடும்”[14]

என வரும் இப்பாடலில் தந்தை சொத்தைப் பிரித்து தன் பங்கை வாங்கிக் கொண்டு நண்பர்கள் தீயவழிகளில் செலவழித்து, எல்லாவற்றையும் இழந்து திரும்பி வீட்டிற்கு வந்தபோது, தந்தை அவனை மன்னித்து ஏற்றுக்கொள்கிறார். சமயப் பொறையும் மனித நேய மாண்பும் பளிச்சிடுகிறது. மேலும், மன்னிப்பைக் குறித்து பி.ஏ. தாஸ் ‘குருதி குடித்த ஈட்டி’ எனும் தமது நாடகத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

“லாங்கி : ஐயனே என்னை யார் எனறு உமக்குத் தெரிகிறதா? பாரும். நான் தான் அந்த இயேசுவின் விலாவைக் குத்திக்கிழித்த நீசன். ஆம் அந்த நீசன் தான் நான்.

இராயப்பர் : அமைதிகொள் அன்பனே, மீண்டும் சொல்கிறேன். உன் மனதறிந்து புரியாத செயல் அது. கிறித்துபிரான் உன்னை மன்னித்துவிட்டபர்.

லாங்கி : ஆமாம், தாங்கள் யார்? அவர் என்னை மன்னித்துவிட்டார் என்பது உங்களுக்கு எப்படி தெரியும்?

இராயப்பர் : (ஒரு தொப்பியைக் கொடுத்தப்படி) பல நாட்களாக நீ

உணவின்றி ரொம்பவும் பலகீனமாகிவிட்டாய். இந்தா இதை அருந்து. நான் யார் என்பதை நீ அறியத்தான் வேண்டுமா? நண்பனே நான்தான் அந்த ராயப்பர். இயேசுவின் சீடர்களில் பிரதான தலைவன். தன் குருநாதரையே தெரியாதென மறுத்த துரோகி. இந்த நன்றியற்றவனையே இயேசு அருள்கனிந்து மன்னித்து விட்டார் எனறால் உன்னையும் அந்த நேச இயேசு நிச்சயம் மன்னித்து விடுவார்”[15]

மேற்காணும் நாடகத்தில் லாங்கினஸ் இயேசுவின் விலாவைக் குத்திக் கிழித்தவன் தான் என்பதை அறிந்த இராயப்பர். அவன்மீது இரக்கமும், கருணையும் கொண்டு அவனுக்கு உண்ண உணவு கொடுத்தும், நீ அறியாமல் செய்த தவற்றினை இயேசு மன்னிப்பார் என்றும் கூறுகின்ற பாங்கு சமயப்பொறைக்கும் சகிப்புத் தன்மைக்கும் சான்றாக விளங்குகிறது.

**தொழிலாளர்களின் கோரிக்கை :**

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவது ஒவ்வொரு முதலாளிகளின் கடமை என்பதனை பி.ஏ. தாஸ் ‘எரிமலை’ எனும் நாடகத்தின் வாயிலாக பின்வருமாறு சுட்டுகிறார்.

“முனுசாமி : தொழிலாளிங்க இன்கிரிமென்ட் விஷயமா மேனேஜர் மணிவண்ணனிடம் கேட்டதற்கு கொடுக்க முடியாதுன்னு மறுத்திட்டாங்க.... எல்லாரும் அதிருப்தியா முணுமுணுக்கிறாங்க.

கருணாகரர் : அப்படியா? நான் மணிவண்ணனிடம் கலந்து பேசுகிறேன் லாபத்திற்கேற்ப உங்களுக்கு இன்கிரிமெண்ட், ஊக்க போனஸ் எல்லாம் சட்டப்படி தரச் சொல்றேன். உழைக்கிறவங்க நீங்க. உங்களுக்கு இல்லாத சகலத்தையும், நான் சுரண்டிக் கொள்வது முறையா? நமக்குள் அதிருப்தியே இருக்கக் கூடாது. அன்பும் பாசமும் பரஸ்பரமா இருக்கணும். இன்றே இதற்கு ஏற்பாடு செய்றேன். சந்தோஷமா போங்க. எல்லாருக்கும் வீடு கட்டித் தரவும் ஸ்கீம் வச்சிருக்கேன்."[16]

மேற்காணும் நாடகத்தின் வாயிலாக தொழிலாளர்களின் இன்கிரிமெண்ட் தொகை மட்டும் அல்லாமல், வீடும் கட்டித் தரேன் என்று கருணாகரர் கூறியிருப்பது சமயப்பொறைக்கும், தயாள கருணை உள்ளத்திற்கும் சான்றாக விளங்குகிறது. தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டிக் கொள்வது முறையல்ல. தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இடையே அன்பும், பாசமும் பரஸ்பரமா இருக்கணும். இன்றைய கால கட்டத்தில், இத்தகைய முதலாளி தொழிலாளியின் பாச உறவினைக் காண்பது அரிதாகும்.

**மாமியார் மருமகள் உறவுநிலை :**

மாமியார் மருமகள் உறவுநிலைகளைப் பற்றி கூறினால், இன்றைய சமுதாயத்தில் அவ்விருவரின் உறவு நிலையும் எலியும், பூனையுமாகத் தான் இருக்கின்றது.

"கணவனின் தாய் அவன் மனைவிக்குச் சாத்தான்"[17] என்னும் ஜெர்மனி பழமொழிக்கு மறுப்பாக மாமியார், மருமகள் அன்பின் பிணைப்பினை டாக்டர். கோரா அவர்கள் 'முற்றுகை' எனும் தமது நாடகத்தில் பின்வருமாறு சுட்டுகிறார்.

"சந்துருவின் தாய் : உன் அப்பாவுக்கு ஒடம்பு சரியில்லையாமே… பாக்கணுமுன்னு ஆசையா இருந்தா போய் ரெண்டு நாள் தங்கிட்டு வாயேன்.

பூவை : இங்கே உங்களை யாரு பாத்துக்கிறது?

அப்பாவுக்கு அடிக்கடி இப்படி வரும்.

ரெண்டு நாள் படித்திருந்து எழுந்திருச்சிப்

புடுவாங்க…(கணவரிடம்) இருங்க, காபி

கொண்டு வரேன். குாபி குடிச்சிப்புட்டு

உங்க தம்பியை ஆஸ்பித்திரிக்குப்

போயிட்டு வரச் சொல்லுங்கள்."[18]

இந்நாடகத்தில் மாமியார் உடல்நிலை குறைவாக இருப்பதால், தந்தையின் உடல்நிலை சரியில்லை என்பதை அறிந்தும் அவரை பார்க்க போகவில்லை. காரணம் தந்தையைப் பார்த்துக் கொள்ள தாய் இருக்கிறாள். இங்கு தன் மாமியாரைப் பார்த்துக் கொள்ள யாருமில்லை என்பதனை பூவை உணர்ந்து, மாமியாரை பார்த்துக் கொள்கிறாள். இவ்வாறு கூறி சமயப் பொறைக்கு டாக்டர். கோரா சான்று தருகிறார்

பிரியா ஜெயசீலன் ‘சமாதானம்’ எனும் தமது சிறுகதையில் மாமியார் மருகள் உறவு நிலையை பின்வருமாறு சுட்டுகிறார்.

“மருமகள் மீது, மாமியாருக்கு வருத்தம் ஏற்பட்டு, வீட்டில் சமாதானம் கெடுகின்றது. மருமகள் தனது மனதில் மாமியார்மீது வெறுப்படைக்கின்ற சூழல் ஏற்படுகின்றது. ஆனால் மாமியாரே தனது தவறை உணர்ந்து மருமகளும் சமாதானம் செய்து கொள்வதே இக்கதையின் போக்காகும்.”[19] என முத்தரிக்கும் இவ்வாசிரியர், எல்லோரும் சமுதாயத்தில் நடக்கும் ஏதோ ஒரு சிக்கல்களைச் சிக்கெடுக்கும் விதமாகவும், சமூக யதார்த்தங்களைப் படம்பிடிப்பதாகவும், கிறித்துவ போதனைகளான அன்பு, அறம், தாழ்மை முதலிய நற்பண்புகளை சமுதாயத்தில் வளர்க்கவும், ஒவ்வொரு மனிதனும் மனித நேய மாண்பில் தழைக்கவும், சமயப் பொறையோடு கூடிய படைப்புகளைப் படைக்கவும் வலியுறுத்தித் தமது படைப்பைப் படம்பிடிக்கிறார்.

மேலும் பிரதாப முதலியார் சரித்திரத்தில் சமூக நிறுவனங்கள் எனும் தலைப்பில் ஆய்வு கட்டுரை எழுதிய முனைவர் ந. பாஸ்கரன், வேதநாயகம் பிள்ளை அவர்களின் கால சமுதாயத்தின் குடும்பச் சூழ்நிலையில் மாமியார், மருமகள் உறவுகளில் சிக்கல்கள் இருந்தன என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்.

அவள் எனக்குச் செய்யும் அன்பும், ஆதரவும், வணக்கமும், மரியாதையும் யாருக்காவது வருமா? எனக்கு நூறு மகள்கள் இருந்தாலும் இந்த விருத்தாப்பிய காலங்களில் என் மருமகளைப் போல என்னை ஆதரிப்பார்களா? நான் வியாதியுள்ள காலங்களில் எனக்கு பத்திய பாகங்கள் செய்து வைத்துக் கவனித்துக் கொண்டாள். அவள் இல்லாவிட்டால் நான் செத்த இடம் புல் முளைத்துப் போயிருக்கும்.”[20]

மேற்காணும் விளக்கத்தின் மூலமாக சமுதாயத்தில் உள்ள குடும்பச் சூழலில் மாமியார், மருமகள் உறவுகளில் சிக்கல்கள் இருந்தாலும், அவற்றில் பெரும்பாலான குடும்பங்களில் இவ்வுறவு சிறப்புற்று இருப்பதை எடுத்துக்கூறி சமயப் பொறையினை ஆசிரியர் வலிறுத்திக் காட்டியது சிறப்பாகும்.

**முடிவுரை :**

நாடகங்கள் இன்றைய ஊடகங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. சங்க காலம் தொடங்கி தற்காலம் வரையிலும் உயிர்ப்புடன் உலாவரும் நாடக இலக்கியங்கள் பட்டணங்கள் முதல் பட்டிக்காடு வரை எல்லோராலும் ஏற்கப்பட்டுள்ளது. சிறப்புமிக்க இப்படைப்பிலக்கியங்கள் ஒரு சிலரின் கைவண்ணத்தில் மட்டுமே சிறப்பாக உருவாகி பார்ப்போரின் நெஞ்சை பாதிப்பயைச் செய்கிறது. அத்தகைய சிறப்புமிக்க படைப்பாளர்களில் குறிப்பாகக் கிறித்தவ எழுத்தாளர்களில் தயானந்தன் பிரான்சிஸ் முன்னோடியாகத் திகழ்கின்றார்.

தனிமனிதன் - குடும்பம் - சமூகம் - பெண்கள் - குழந்தைகள் என அவர் தமது படைப்புகளில் பொதுநலமும், சமயப்பொறையும் விரவியுள்ளது யாண்டும் ஆராய்ந்து அறியப்பட்டு உள்ளது. தயாவின் சமயப்பொறைக்கு அவரது முதற்படைப்பான ‘தமிழகத்தில் தோமையர்’ மிகச் சிறந்த சான்றாகும். என்பதோடு அவர் எழுதிய பிற நாடகங்களாவன : கற்கள், ஏற்றுக்கொள்கிறேன், அப்பாவுக்கு அஞ்சலி முதலிய நாடகங்களிலும் சமயப்பொறை கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள் :

1. டாக்டர்.சி. பாலசுப்பிரமணியன், இலக்கிய காட்சிகள் ப.65
2. பி. இராமநாதன், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் பேரகராதி – 2 ப.157
3. டாக்டர்.தி. தயானந்தன் பிரான்சிஸ், தமிழகத்தில் தோமையர் ப.67
4. குறள் 72
5. யோவான் 3 : 16
6. இரட்சண்ய யாத்திரிகம், மெய்யுணாச்சிப்படலம் பா.7
7. ப. ராமஸ்வாமி, உலகப் பழமொழிகள் ப.181
8. மதுரை இளங்கவின், கிறித்தவ தமிழ் இலக்கிய வளர்ச்சி ப.246
9. மேலது ப.195
10. எம். இருதயராஜ், பண்பினை வளர்க்கும் பைபிள் கதைகள் பக்.19-20
11. டாக்டர்.தி. தயானந்தன் பிரான்சிஸ், கற்கள் ப.71
12. இரட்சண்ய யாத்திரிகம்,.ஆதிபருவம் பா.88
13. லூக் 15 : 17
14. இரட்சண்ய யாத்திரிகம், ஆதிபருவம் பா.119
15. பி.ஏ. தாஸ், குருதி குடித்த ஈட்டி பக்.12-13
16. பி.ஏ. தாஸ், எரிமலை பக்.178-179
17. ப.ராமஸ்வாமி, முன்னூல் ப.109
18.. டாக்டர். கோரா, முற்றுகை (மூன்று நாடகங்கள்) ப.23
19. மதுரை இளங்கவின், முன்னூல் ப.210
20. முனைவர். ந. பாஸ்கரன், பிரதாப முதலியார் சரித்திரத்தில் சமூக நிறுவனங்கள் ப.149

**குழவெ யேஅந : டீயயஅலைெ கழவெ**
**குழவெ ளுணைந : 14**
**டுலைெ ளைஉா : 1.5**